**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 48/2017**

**Prosecution witness : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : வெங்கடலட்சுமி | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(Accused present)**
**22.02.2023**
**முதல் விசாரணை**

நான் திருநகரில் குடியிருந்து வருகிறேன். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியின் பெயர் தனபாண்டி ஆவார். புகார்தாரர் சாட்சி மனோகரனை எனக்கு தெரியும். அவர் என்னுடன் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தார். நாங்கள் மாருதி என்ற பெயரில் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தோம். டி.புதுப்பட்டி என்ற கிராமத்தின் சர்வே எண் 13/08 என்ற இடத்தின் ஒரு ஏக்கர் 35 செண்ட் நிலத்தினை துரைபாண்டியன் மற்றும் பாண்டியன் ஆகியோர்களிடம் இருந்து மனோகரன் பெயருக்கு பவர் பத்திரம் வாங்கினோம். ரியல் எஸ்டேட் பணி செய்து வந்ததால் நாங்கள் கிரையமாக வாங்காமல் மனோகரன் பெயருக்கு 04.03.2009 அன்று பவர் பத்திரமாக வாங்கினோம். அதற்காக ரூ.15 லட்சத்தி 50 ஆயிரம் ரூபாயை நாங்கள் பாண்டி என்ற துரைபாண்டியனுக்கு கொடுத்தோம். நாங்கள் பவர் வாங்கிய சமயத்திலேயே ஆஜர் எதிரி எங்களிடம் வந்து நாங்கள் துரைபாண்டியன் மற்றும் பாண்டியனிடம் வாங்கிய மேற்கண்ட இடத்தை வாங்குவது சம்மந்தமாக எங்களிடம் பேசினார். நாங்கள் சொன்ன விலைக்கு ஆஜர் எதிரி உடன் படாததால் அவர் எங்களிடம் வரவில்லை. நாங்களும் அதை விட்டுவிட்டோம். பின்பு அதே 2009 ம் வருடம் மேற்சொன்ன அதே இடத்தில் சுமார் 67 1/2 செண்ட்டை துரைபாண்டியன் ஆஜர் எதிரிக்கு விற்ற விபரம் எங்களுக்கு தெரியவந்தது. ஏற்கனவே மனோகரன் பெயருக்கு துரைபாண்டியன் பவர் கொடுத்துவிட்டு ஆனால் எங்களுக்கு தெரியாமல் ஆஜர் எதிரிக்கு 67 1/2 செண்ட்டை துரைபாண்டியன் விற்று விட்டார். மேற்படி விசயம் தெரியவந்ததும் நாங்கள் பாண்டி என்ற துரைபாண்டியனிடம் கேட்டோம். துரைபாண்டியன் அதை சரிசெய்து தருவதாக கூறினார். ஆனால் அவர் அவ்வாறு எதுவும் செய்யவில்லை. எனவே நாங்கள் தாலுகா காவல் நிலையத்தில் புகார்

கொடுத்துவிட்டோம். புகாரை மனோகரன் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் கு.வி.**

இந்த வழக்கில் எனது பணம் எதுவும் மோசடியாகவில்லை என்றால் சரியல்ல. மனோகரன் கொடுத்ததாக சொல்லும் பணம் பணத்தில் பாதி என்னுடையது என்றால் சரிதான். இது சம்மந்தமாக நான் போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகாரின் மனோகரன் முன் பணத்தில் பாதி வெங்கடலட்சுமியுடையது என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மனோகரன் புகாரில் நான் பணம் கொடுத்த விபரத்தை நான் சொல்லாததால் அவர் என்னை மோசடி செய்ததாக எடுத்துக் கொள்ளலாமா என்றால் இல்லை. நான் பணம் கொடுக்காததால் தான் புகாரில் சொல்லவில்லை என்றும் மனோகரன் இறந்துவிட்டதால் தாவா சொத்தை மோசடியாக அடைவதற்கு வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பவர் ஆவணத்திற்கும் கிரைய ஒப்பந்த ஆவணத்திற்கும் கிரைய ஆவணத்திற்கும் உள்ள வேறுபாடு எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பவர் கொடுப்பதற்கு எழுதி வாங்கியவர் பிரதிபலன் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். அன்றைய தேதியிலேயே நாங்கள் கிரைய ஒப்பந்தம் பதிவு செய்தோம் என்றால் சரிதான். ஆனால் பவர் பத்திரத்தில் முன் பணம் பெற்றுக் கொண்டதாக எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் மேலே சொன்ன கிரைய ஒப்பந்தத்தை பதிவு செய்துள்ளோமா என்றால் இல்லை. காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்கும் போது நானும் மனோகரன் தான் இருந்தோம். புகார் கொடுக்கும் போது கிரைய ஒப்பந்தத்தை இணைத்து கொடுத்துள்ளோமா என்றால் கொடுத்துள்ளோம். நாங்கள் முழு தொகையையும் கொடுத்துவிட்டோம் என்றால் சரிதான். அரசாங்கத்திற்கு கொடுக்க வேண்டிய பதிவு கட்டணத்தை மோசடி செய்ய வேண்டி மொத்த கிரைய தொகையை கொடுத்த பின்பும் நாங்கள் எங்கள் பெயரில் கிரையம் முடிக்காமல் இருந்தோம் என்றால் சரிதான். ஆஜர் எதிரி எங்களிடம் தாவா சொத்தை கிரையம் கேட்டு வந்ததால் நாங்கள் கிரையம் பதிவு செய்யாமல் இருந்தோம் என்றால் சரிதான். மொத்தம் உள்ள ஒரு ஏக்கர் 35 செண்டில் தற்போது எங்கள் கை வசம் எந்த இடமும் இல்லை என்றால் சரிதான். நாங்கள் வேறு ஒரு நபருக்கு 67 1/2 சென்ட்டை கிரையம் செய்துள்ளோம். அவர் மனோகரனின் சகோதரர் ஆவார். அது எப்பொழுது விற்பனை செய்துள்ளோம் எனக்கு ஞாபகம் இல்லை. இந்த கிரைய ஆவணத்தில் நான் உரிமையாளர் என்ற கோதாவில் நான் கையொப்பம் இடவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரிக்கு கிரையம் செய்யப்பட்ட நிலத்தை ரத்து செய்யக்கோரி உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளோமா என்றால் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளோம். அதன் முடிவு என்னவென்று எனக்கு தெரியாது. தாவா சொத்தை பொறுத்து எனக்கு எந்தவித பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியதை உள்ளது என காட்ட நேரடி ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரி எந்தவிதமான மோசடியிலும் ஈடுபடவில்லை என்றும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. எதிரி முறைப்படியாக தான் கிரையம் பற்றி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.